# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW-7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜ்குமார் | Caste | : | |
| S/o. | : | மணி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 11.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது கருக்குப்பட்டியில் குடியிருக்கிறேன். சம்பவத்திற்கு முன்பு எம்எஸ்எஸ் டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். சம்பவத்திற்கு 3 மாதங்கள் முன்பு வேலையிலிருந்து நின்றுவிட்டேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனக்கு சித்தப்பா.

07.01.2023ம் தேதி மதியம் சுமார் 3.00 மணிக்கு நான் வீட்டில் சேரில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி

ஜட்டியோடு ஒரு சாக்குமூட்டையை இடது தோள்பட்டையில் வைத்துக்கொண்டு கிணற்றுபக்கமாக போனார். பின்னர் 4.30 மணி சுமாருக்கு ஆஜர் எதிரி ஒரு வெள்ளை கலர் ஸ்கூட்டியில் கிளம்பி சென்றார். பிறகு சுமார் 7.30 மணி அளவில் நான் அமரகுந்தி சென்றுவிட்டேன். பின்னர் இரவு 11.00 மணி அளவில் வீட்டிற்கு வந்தேன்.

மறுநாள் 08.01.2023ம் தேதி நான் வேலை நிமித்தமாக மேட்டுர் போய்விட்டு மதியம் 2.00 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். மதியம் 3.00 மணிக்கு நான் கருப்பசாமி அய்யனார் கோவிலுக்கு தண்ணீர் விடுவதற்காக சென்றேன். அங்கு கிணற்றுக்கு சென்று மோட்டார் போட்டபோது தண்ணீர் வரவிலலை என்பதால் புட்வால்வை செக் செய்ய போனபோதுதான் கிணற்று நீரில் சடலம் இருந்தது தெரிய வந்தது. பிறகு நான் எனது பெரியப்பா ஆறுமுகத்திடமும் மற்றும் குமாரிடமும் தகவல் சொன்னேன். அதன்பின்னர் நான் 100க்கும் தகவல் சொன்னேன். 10 நிமிடத்தில் தீயணைப்பு துறையிலிருந்து ஆட்கள் வந்தார்கள். நான் விவரத்தை சொன்னேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.